**Previous Examination date – 25.06.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 129 of 2021**

**Deposition of Witness P.W.7**

| | |
|---|---|
| **Name : முருகு (எ) முருகேஸ்வரி** | **Father/Husband's Name : கணேசன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 21.11.2025.**

**A1 produced on PT Warrant , A2 died (C.A) , A3 absent 317 P.FA**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது தேனி மாவட்டம் சுந்தராஜபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஜயசாந்தி எனது சித்தி மகள் ஆவார். கடந்த 18.03.2012ம் தேதி அன்று நிலக்கோட்டை மாரியம்மன் கோவிலில் அ.சா.1க்கும், செல்லப்பாண்டிக்கும் திருமணம் நடைபெற்றது. நாங்கள் சீர்வரிசையாக அ.சா.1க்கு 30 பவுன் நகைகள் செய்தோம். 1 லட்சம் ரொக்கமாக பணம் கொடுத்தோம். நிலக்கோட்டையில் ஆஜர் எதிரிக்கு நிலம், பெரிய வீடு இருக்கிறது என்று எங்களை அழைத்து சென்று காண்பித்தார்கள். இரண்டு குழந்தைகள் பிறக்கும் வரை எதிரி நன்றாக பார்த்து கொண்டார். சீர்வரிசையாக குத்துவிளக்குகள், வீட்டு சாமான்கள் பித்தளை பாத்திரம், கட்டில் , பீரோ மொத்தமாக வாங்கி கொடுத்து அனுப்பினோம். முதல் பிரசவத்திற்கு முன்பு அ.சா.1 வீட்டிற்கு வந்த போது நகை அணியாமல் வீட்டிற்கு வந்தார். எனது தங்கை அ.சா.1 நகையெல்லாம் குழந்தை பிறக்கும் போது போட்டு செல்லவேண்டாம் என்று கணவர் வீட்டில் கழற்றி வைத்து விட்டு செல்லுமாறு எதிரி சொன்னார். பிரசவத்திற்கு வந்து சென்ற பின்பு கொஞ்ச நாள் நன்றாக இருந்தார். 3 மாதத்தில் நகை பணம் வேண்டுமென்று அவரது கணவர் வீட்டில் கேட்டுள்ளார்கள். அதற்கு பிறகு அ.சா.1 ஐ நிலக்கோட்டையில் உள்ள வீட்டில் வைத்து அடித்து பிரச்சனை செய்துள்ளார்கள். அதற்கு பிறகு அ.சா.1 அந்த இடத்தில் இருந்து பழனிக்கு வந்துவிட்டார். அதற்கு பிறகும் அ.சா.1 ஐ அடிக்கடி குடித்துவிட்டு வந்து தகராறு செய்தார். அவ்வாறு தகராறு செய்யும் போது அ.சா.1 அடித்துவிட்டார். குழந்தைகளின்**

காதுகுத்துக்கு அ.சா.1ன் இரண்டு அண்ணண்களும் தலைக்கு ரூ.1லட்சம் கொடுக்கவேண்டும் என்று கேட்டதால் கொடுத்தார்கள். எனது சித்தி , சித்தப்பா ரூ.1 லட்சம் செய்தார்கள். குழந்தைகளை ஆஜர் எதிரி பார்க்கவில்லை அடிக்கடி பழனியில் வந்து அ.சா.1யிடம் தகராறு செய்தார். போலீசார் என்னிடம் இங்கு வைத்து விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. 1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.11.21 17:00:01 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

Previous Examination date – 25.06.2025

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 129 of 2021**

**Deposition of Witness P.W.8**

| | |
|---|---|
| Name : தேன்மொழி | Father/Husband's Name : ரவிக்குமார் |
| Village : | Taluk : |
| Caste : | Calling : |
| Religion : | Age : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 21.11.2025.

A1 produced on PT Warrant , A2 died (C.A) , A3 absent 317 P.FA

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தேனி மாவட்டம் சுந்தராஜபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஜயசாந்தி எனது கணவரின் உடன் பிறந்த தங்கை ஆவார். ஆஜர் எதிரி விஜயசாந்தியின் கணவர், எதிரி சந்திராதேவி எதிரி செல்லப்பாண்டியின் தங்கை. கடந்த 2012ம் வருடம் நிலக்கோட்டையில் வைத்து அ.சா.1க்கும், ஆஜர்எதிரிக்கும் திருமணம் செய்து வைத்தோம். அதற்கு பிறகு அ.சா.1 அடிபட்டு வந்தும் இருந்தார்கள். ஏற்கனவே 30 பவுன் நகைபோட்டு அ.சா.1க்கு திருமணம் செய்துவைத்தார்கள். ஆஜர் எதிரி புல்லட் கேட்டார். ரூ.10 லட்சம் ஆஜர் எதிரி கேட்டார். அ.சா.1 ரூ.6 லட்சத்துக்கு லோன் போட்டு தனது பெற்றோருக்கு கஷ்டம் இல்லாத வகையில் அந்த பணத்தை கணவரிடம் கொடுத்தார். ஆஜர் எதிரி அ.சா.1க்கு ரெம்ப சித்தரவதை செய்தார் நாங்கள் அழைத்தும் அவர் வரவில்லை. ஆஜர் எதிரியின் தங்கை தான் இவ்வளவு நிகழ்வுக்கும் காரணம். அ.சா.1ன் பொருட்களையும் ஆஜர் எதிரி கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். குழந்தைகளை சின்ன பிள்ளைகளிலிருந்து வந்து பார்க்கவில்லை. குழந்தைகளுக்கு எதுவும் செய்யவில்லை. ஆஜர் எதிரி முதலில் நன்றாக தான் இருந்தார் அதன் பிறகு என்ன ஆனது என்று தெரியவில்லை அ.சா.1க்கு வாழ்க்கை போய்விட்டது. அ.சா.1 நடந்த விபரங்களை முதலில் கணவருக்காக சொல்லவில்லை. (3ம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த சாட்சி என்ன ஆனது என்று சொன்னதை பதிவு செய்யவில்லை என்று சொன்னார். ஆனால் இந்த வார்த்தைக்கு மேலே 3 வரியில் அதற்கு பிறகு என்ன

ஆனது என்று தெரியவில்லை என்று சொன்னது மிகத்தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிரியும் கற்றறிந்த வழக்கறிஞர் முதல் விசாரணை சாட்சிய பதிவின் போது அந்த சாட்சியத்தை பதிவு செய்ய முடியாத அளவிற்கு சரியாக சாட்சியம் பதிவு செய்துகொண்டிருக்கும் நிலையில் அதை சீர்குலைக்கும் வகையில் செயல்பாடு இருப்பதால் கற்றறிந்த வழக்கறிஞருக்கு இருக்கும் ஆட்சேபணையை அந்த பகுதி முடிந்தவுடன் தெரிவிக்குமாறு அவருக்கு தெரிவிக்கப்படுகிறது. கற்றறிந்த வழக்கறிஞர் சீர்குலைக்கும் வகையில் இருக்கிறது என்று பதிவு செய்யகூடாது என்று சொன்னார். கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எ. சசிக்குமார் அவர்கள் முதலில் 3ம் எதிரிக்கு வக்காலத்து தாக்கல் செய்திருக்கும் திரு. துரைமுருகன் அவர்களுக்காக முன்னிலையாகியிருப்பதாக தெரிவித்தார். தற்போது 1ம் எதிரிக்கு ஆஜர் ஆனதாக தெரிவித்தார். ஆனால் 1ம் எதிரிக்கு கற்றறிந்த வழக்கறிஞர் இன்னும் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை. )

கேள்வி : வேறு என்ன கொடுமை நடந்தது.

பதில் : எனது கணவர் இறந்துவிட்டார் அ.சா.1க்கு எனது கணவர் அண்ணன் என்ற முறையில் இருந்தார். தற்போது அந்த குழந்தைகளுக்கு நல்லது செய்யவேண்டும் நாங்கள் போட்டதை அந்த குழந்தைகளுக்கு வாங்கி கொடுக்கவேண்டும்

1ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சசிக்குமார் அவர்களின் ஆட்சேபணை – இந்த பதிவு செய்வதற்கு ஆட்சேபணை இல்லை.

கேள்வி போலிசார் விசாரித்தார்களா

பதில் ஆமாம்

1ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சசிக்குமார் அவர்களின் ஆட்சேபணை – இந்த பதிவு செய்வதற்கு ஆட்சேபணை இல்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. 1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.21 17:00:10 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 25.06.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 129 of 2021**

**Deposition of Witness P.W.9**

| | |
|---|---|
| **Name : ராஜலட்சுமி** | **Father/Husband's Name : வணங்காமுடி.** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 21.11.2025.**

**A1 produced on PT Warrant , A2 died (C.A) , A3 absent 317 P.FA**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஜயசாந்தி எனது கணவரின் தங்கை ஆவார். ஆஜர் எதிரி அ.சா.1ன் கணவர். எதிரி சந்திராதேவி ஆஜர் எதிரியின் தங்கை ஆவார். கடந்த 18.03.2012ம் தேதி அ.சா.1க்கும், ஆஜர் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற போது சபையில் ஆஜர் எதிரியின் பெற்றோர் 45 பவுன் நகை கேட்டார்கள். நாங்கள் 30 பவுன் நகை சீர் செய்தோம். ஆஜர் எதிரிக்கு 2 பவுன் கைசெயின் , 1 பவுன் மோதிரம், 2 பவுன் செயின் ஆகமொத்தம் 5 பவுன் கொடுத்தோம். சில நாட்கள் கழித்து 15 பவுன் நகையும், 10 லட்சம் ரூபாயும் 1 இருச்சக்கர வாகனம் கேட்டு அ.சா.1 யிடம் ஆஜர் எதிரியும் , அவரது அம்மாவும் , அவரது தங்கையும் கேட்டு பிரச்சனை செய்தார்கள் திருமணத்தின் போது 1 லட்சம் ரூபாய் சீதனமாகவும் , பண்டபாத்திரமும் கொடுத்தோம். அதற்கு பிறகு அ.சா.1ன் மூத்த மகனுக்கு காது குத்து வைத்த போது நானும் ,எனது அத்தான் வீட்டிலிருந்தும், எனது மாமனார் வீட்டிலிருந்தும் 1 லட்சம் வீதம் மொத்தம் 3 லட்சம் கொடுத்தோம். உறவினர்கள் எல்லாம் சேர்ந்து மொய் எழுதின எல்லா பணமும் சேர்த்து மொத்தம் 9 லட்சம் பணத்தை ஆஜர் எதிரி வைத்துகொண்டார். அ.சா.1 ன் எ.டி.எம் கார்ட் அனைத்தையும் வாங்கி வைத்து கொண்டார். அதற்கு பிறகு அ.சா.1ன் 15 பவுன் தாலிக்கொடியையும் வாங்கி வைத்து கொண்டார். ஆஜர் எதிரி தொழில் செய்ய வேண்டும் என்று அ.சா.1 லோன் போட்டு 6 லட்சம் எடுத்து கொடுத்தார். அந்த லோன் பணத்தையும் அ.சா.1 தான் திருப்பி செலுத்தி வருகிறார். அ.சா.1 ஐ அடித்து சித்தரவதை**

படுத்திவிட்டார். தற்போது அ.சா.1 பழனியியில் இருக்கிறார். பொருட்களை கொடுத்துவிட்டு சந்தோசமாக இருங்கள் என்று நாங்கள் சொல்லியும் ஆஜர் எதிரி மறுத்துவிட்டார். போலீசார் என்னை மகளிர் காவல் நிலையத்தில் இருந்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. 1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.11.21 17:00:16 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**21.11.2025**

**CC 129/2021**

**PW1 . விஜயசாந்தி , தபெ. கருப்பையா**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 21.11.2025.**

**A1 produced on PT Warrant , A2 died (C.A) , A3 absent 317 P.FA**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1. சந்திராதேவி என்ற பெயரில் உள்ள ACB அய்யம்பாளையம் SBI கணக்கு எண். 39989661627 என்ற வங்கி கணக்கின் 1.1.2020 முதல் 07.08.2025 வரை உள்ள வங்கி கணக்கு விபரப்பட்டியல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சந்திராதேவி என்ற பெயரில் உள்ள ACB அய்யம்பாளையம் SBI கணக்கு எண். 41394648730 என்ற வங்கி கணக்கின் 1.1.2020 முதல் 07.08.2025 வரை உள்ள வங்கி கணக்கு விபரப்பட்டியல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. சந்திராதேவி என்ற பெயரில் உள்ள வத்தலகுண்டு SBI கணக்கு எண். 32886076439 என்ற வங்கி கணக்கின் 1.1.2020 முதல் 07.08.2025 வரை உள்ள வங்கி கணக்கு விபரப்பட்டியல் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 17.07.2025 தேதியிட்ட ACB அய்யம்பாளையம் SBI வங்கி கிளை முதன்மை மேலாளர் கொடுத்த கடிதம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. சந்திராதேவி என்ற பெயரில் உள்ள ACB அய்யம்பாளையம் SBI கணக்கு எண். 41394648730 என்ற வங்கி கணக்கின் 02.11.2022 முதல் 17.07.2025 வரை உள்ள வங்கி கணக்கு விபரப்பட்டியல் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. சந்திராதேவி என்ற பெயரில் உள்ள ACB அய்யம்பாளையம் SBI கணக்கு எண். 39989661627 என்ற வங்கி கணக்கின் 05.02.2021 முதல் 17.07.2025 வரை உள்ள வங்கி கணக்கு விபரப்பட்டியல் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

7. **1, 3** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.21 17:00:24 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**